## மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் நாள் திரு.K.தயாநிதி, M.A.,B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 855/2022 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு. சுப்பிரமணியம் | | |
| த/பெ. | : திரு. | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : | தொழில் | : |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். 22-12-2020 தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் அசல் **வா.சா.ஆ**.1. 04-11-1987 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண். 1107/1987, புஞ்சை புளியம்பட்டி சார்பதிவகம்) சான்று நகல் **வா.சா.ஆ**.2. 19-09-2022 தேதியிட்ட அடமான கடன் பத்திரம் மீட்டெடுப்பு ஆவணம் (Discharge receipt) ஆவண எண். 6798/2022, புஞ்சை புளியம்பட்டி சார்பதிவகம் சான்று நகல் **வா.சா.ஆ**.3. 12-11-2022 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ**.4. வாதியின் ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ**.5 (அசலுடன் ஒப்பிட்டுப் பார்த்து குறியீடு செய்யப்படுகிறது). வாதியின் மகள் கவிதா பெயரில் உள்ள பூ கமிஷன் மண்டியின் பட்டியல் ரசீதுகள் எண்ணிக்கை -21 அசல் **வா.சா.ஆ**.6. வாதியின் மகள் கவிதாவின் ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ**.7 (அசலுடன் ஒப்பிட்டுப் பார்த்து குறியீடு செய்யப்படுகிறது). தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.6 ஆவணமானது பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணைக்கான ஒத்திவைக்கப்படுகிறது.